# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS. No. 176/2024 நாள்.19.1.2026**

DW1- திரு. லெட்சுமி க/பெ. திரு. கணபதி

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என் கணவர் கணபதி சவூதிஅரபியாவில் இறந்து ஒரு மாதம் கழித்துதான் அவருடைய உடல் இந்தியாவிற்கு வந்தது என்றால் ஆமாம். அந்த காலகட்டத்தில் நானும் என்னுடைய குழந்தையும் வாதிவீட்டில்தான் இருந்தோம் என்றால் ஆமாம். என் கணவரின் இறுதிசடங்கு முடிந்தஅன்றே எங்களுக்குள் பிரச்சனை என்றால் ஆமாம். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் வாதியின் மகனும், மகளும் காவல்நிலையத்தார் கைது செய்து சிறையில் அடைத்தார்கள் என்றால் சரியல்ல மகளை மட்டும் சிறையில் அடைத்தார்கள் மற்றவர்கள் முன்ஜாமீன் பெற்றார்கள். அந்த புகாரில் நான் வாதிகுடும்பத்தை சேர்ந்த அனைவர் மீதும் கொடுத்திருந்தேன் என்றால் மாமனாரைதவிர மற்றவர்கள் பெயரில் கொடுத்தேன். அந்த வழக்கில் வாதிகுடும்பத்திற்கு எதிராக சாட்சி சொன்னேன் என்றால் ஆமாம். வாதி ஒரு பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்து தொடர்ந்து நடத்தாததால் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் ஆமாம். அந்த வழக்கில் இந்த வழக்கிலுள்ள வீட்டுமனைகள் மட்டும் தாவா சொத்து என்றால் ஆமாம். வா.சா.ஆ.20, 21 குற்ற வழக்கு நிலுவையில் இருக்கும்போது ஏற்பட்டது என்றால் ஆமாம். அதே தேதியில் பி. வா.சா.ஆ.1 ஏற்பட்டது என்றால் ஆமாம். வா.சா.ஆ.20, 21 இல் கையெழுத்து போட்டால்தான் பிவா.சா.ஆ.1 இல் கையெழுத்து போடுவதாக சொன்னதால் அது ஏற்படுத்தபட்டது. வா.சா.ஆ.20, 21 அதில் கண்ட கருத்து படி சொத்தையும், தொகையையும் பிரித்து கொள்ளுவதற்காக ஏற்படுத்தபட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.20, 21 இல் கண்டபடி சொத்துக்களையும் தொகையையும் பிரித்து கொள்ள நான் ஏதும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. குற்ற வழக்கில் வாதி வசம் என்னுடைய நகை மற்றும் பொருட்கள் உள்ளது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவை நிரூபணம் ஆகாததால் அந்த வழக்கில் விடுதலை தீர்ப்பானது என்றால் ஆமாம். தற்போது மேற்படி வழக்குகளின் காரணமாக எங்களுக்குள் ஒருவர் ஒருவருக்கு நம்பிக்கை இல்லை

என்றால் ஆமாம். என் கணவரின் இறப்புகொடையில் வாதிக்கும் பாகம் உள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.20, 21 இல் மேற்கண்ட தொகையை எப்படி பிரித்து கொள்ளுவது என்று எழுதியுள்ளோம் என்றால் ஆமாம். சவூதிஅரபியாவிலிருந்து இறப்பு கொடை என்னுடைய விலாசத்திற்கு வந்த அஞ்சல் உறை பி.வா.சா.ஆ.2 என்றால் ஆமாம். அங்கிருந்து வந்த தகவல்கள் நான் மனு செய்தது மின்னஞ்சல் என்றால் ஆமாம். எனக்கு வரும் தபாலை அவர்களிடம் சொல்லாமல் பிரித்தால் இருவருக்கும் பிரச்சனை என்றால் கவரை பிரித்து தபாலின் நகலை கொழுந்தனாரிடம் கொடுத்துள்ளேன். இந்த விபரத்தை என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். பின் யோசனை செய்து பொய்யாக சொல்கிறேன் என்றால் அந்த இடத்தில் அது தேவைப்படவில்லை அதனால் சொல்லவில்லை. வாதி நல்லஉடல்நிலையில் உள்ளார் என்றும், அவர் முன்னிலையில் நான் ஏன் பிரிக்கவில்லை என்றால் அவர் வர தயாராக இல்லை. பி. வா.சா.ஆ.2 இல் காசோலை எண் மட்டும் உள்ளது என்றும் தொகை குறிப்படவில்லை என்றால் ஆமாம். நான் வழக்கில் சொல்லியுள்ள தொகையை விட அதிகபடியான தொகை வந்துள்ளது என்றும் நான் வழக்கில் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நகல் இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வங்கி கணக்கு தாளை வங்கியிருந்து வாங்கி பார்க்க எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் நானே தயார் செய்து தாக்கல் செய்கிறேன். என்னுடைய எதிர்வழக்குரையில் வாதி, அவருடைய கணவருக்கு பென்சன் வருகிறது என்றும், அவர்கள் என் கணவரை சார்ந்து இருக்கவில்லை என்றும், சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. என் கணவர் இறந்துபோகும் வரை வாதிக்கும் அவருடைய கணவருக்கும் மருத்துவ செலவுகளை அவர்தான்செய்து வந்தார் என்றால் ஆமாம். மேற்படி இறப்பு தொகை வருவதற்கு முன்பாக வாதிக்கும் அவருடைய கணவருக்கும் இறப்புதொகை என்று வாழ்வாதாரத்திற்காக அனுப்பினார்கள் என்றால் ஆமாம். அதேபோல் எனக்கும் 30 லட்சம் வந்தது. மொத்தம் எனக்கு 87 லட்சம் வந்தது என்றால் ஆமாம். வா.சா.ஆ.20, 21 ன் படி தற்போதாவது நான் அதில்கண்டபடி பிரித்து கொள்ள தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். 30 லட்சம் இன்சூரன்ஸ் பணத்தில் வாதிக்கும் வாதியின் கணவருக்கும் பங்கு உண்டு என்றால் இல்லை அது என் கணவர் இன்சூரன்ஸ் எடுக்கும்போது கம்பெனியில் சொன்னதன் அடிப்படையில் அவர்கள்

பிரித்துகொடுத்தார்கள். மேற்படி 30 லட்சத்தை மறைக்கதான் இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது உண்மையல்ல என்றும் வாதிக்கும் அதில் பங்கு உண்டு என்றால் சரியல்ல. 30 லட்சத்தில் வாதிக்கு பாகம் கிடையாது என்று சொல்வது தவறு என்றும் அதற்கு ஆதாரம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 87 லட்சம், தாவா அசையா சொத்துக்களில் வாதிக்கு பாகம் கிடைக்ககூடியது என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN
Date: 2026.01.19 18:31:03 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**